யாழ்ப்பாணம்

# சிறிமா-காமினி முக்கிய உடன்பாடு கைச்சாத்து

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தலைவர் திரு. காமினி திசநாயக்காவும் நேற்று முக்கிய உடன்பாடொன்றில் கைச்சாத்திட்டுள் (3-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 7 இதழ் 94

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 20 — 05 — 1993

## வடமேல் மாகாணத்தில் பிரேமச்சந்திரா முதல்வர்?

(கொழும்பு)

எதிர்கட்சிகள் வெற்றி பெற்ற வடமேல் மாகாண சபையிலும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் திரு.ஜி. எம்.பிரேமச்சந்திராவும் தென் மாகாண சபையிலும் பொதுசன (3-ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு நாளை அறிக்கை சமர்ப்பிக்கும்

(கொழும்பு)

மாகாணசபை தேர்தலை அவதானிப்பதற்கென இலங்கை வந்த சர்வதேச அவதானிகள் குழு அதன் அறிக்கையை நாளை வெள்ளிக்கிழமை தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

சர்வதேச அவதானிகள் தேர்தல் இடம்பெற்ற ஏழு (3-ம் பக்கம் பார்க்க)

# ● இனப் பிரச்னைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கு அரசியல் கட்சிகள் நிராகரிப்பு

## கட்சித் தலைவர்களுக்கு ஆபத்தாகலாம்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்னைக்கு அமைதியான தீர்வொன்றைக் காணவிடாது இலங்கையிலுள்ள பிரதான அரசியல்க்கட்சிகள் அதனை நிராகரித்து வருவதாக 'சமூக சமய நிலைய இயக்குனர்' திரு. திஸபாலசூரிய குற்றம்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: தத்தமது கட்சிகளின் ஆதாயத்திற்காக கடந்த 37 வருடங்களாக இலங்கையில் கொழுந்துவிட்டெரியும் இனப் பிரச்னைக்கு சமாதானமான முறையில் அமைதித் தீர்வொன்றைக் காண்பதை நாட்டிலுள்ள பிரதான அரசியல் கட்சிகள் நிராகரித்து வருகின்றன.

இந்த நடவடிக்கை நாட்டுக்கு மட்டுமல்ல, அரசியல் தலைவர்களுக்கும் கூட அபாயகரமானது என்பதை மக்கள் அவர்களுக்கு சுட்டிக்காட்ட முடியுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசு இந்த யுத்தத்தில் செலவுகளை ஈடுகட்டுவதற்கு பெருமளவில் வெளிநாட்டு கடன்களையே நம்பியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## ஹரோல்ட் ஹேரத் அமைச்சரவைப் பேச்சாளர்

(கொழும்பு)

இதுவரை காலமும் செய்தியாளர் மகாநாட்டில் அமைச்சரவை பேச்சாளராக கடமை புரிந்த திரு. ரணில் விக்கிரமசிங்க, பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டதனால் புதிய அமைச்சரவை பேச்சாளராக அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நடந்த செய்தியாளர் மகாநாட்டில் அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் செய்தியாளர்களுக்கு செய்திகள் வழங்கினார். இதுவரை தமக்கு ஒத்துழைப்பு வழங்கிய செய்தியாளருக்கு திரு. ரணில் நன்றி கூறினார். (சு-சி)

## கம்உதாவ கண்காட்சியை ரத்துச் செய்ய உத்தரவு!

(கொழும்பு)

மிகிந்தலையில் அடுத்த மாதம் நடைபெற இருந்த கம் உதாவ கண்காட்சியை அரசு திடீரென ரத்துச்செய்துள்ளது.

கம்உதாவ கண்காட்சிக்கென நிருவப்பட்ட கட்டிடங்களும் முதலீட்டுச் சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசா மிகவும் ஆடம்பரமான முறையில் இக்கண்காட்சியை நடத்த ஏற்பாடு செய்திருந்தார். புதிய ஜனாதிபதி அப்படியான ஆடம்பர நிகழ்வுகளை நிறுத்தியதோடு முன்னாள் ஜனாதிபதியின் பெயரில் சமய நிகழ்வுகள் அங்கு இடம்பெறுமெனவும் அறிவித்துள்ளார்.

இது திரு. பிரேமாவின் நெருங்கிய ஆதரவாளர்களுக்குப் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாம். (கே-ஸி)

## தேர்தல் முடிவு ஆராய்வு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் முடிவுகளைக் குறித்து தமது கட்சி ஆராய்ந்து வருவதாக அமைச்சர் ஹரோல்ட்ஹேரத் தெரிவித்துள்ளார். (ஐ)

## பலரது பதவிக்கு விஜயதுங்க வேட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு வாரத்துக்குள் நிர்வாகத்தில் பல மாற்றங்களை செய்துள்ளார் என்று அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதன் பிரகாரம் பொலிஸ் அதிகாரி ஒருவர் லீவில் அனுப்பப்பட்டுள்ளார். சுங்கத் திணைக்கள அதிகாரியான லலித் வேந்திர என்பவரை 3-ம் பக்கம் பார்க்க)

## குழப்பத்தை உருவாக்க முயன்ற தீயசக்திகளுக்கு தோல்வி

### பிரதமர் ரணில்

(கொழும்பு)

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகளைப் பயன்படுத்தி, குழப்பத்தை உண்டு பண்ண சில தீயசக்திகள் பிரயத்தனம் செய்தபோதிலும் அவற்றிற்கு இடமளியாது உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதில் அரசாங்கம் வெற்றி கண்டுள்ளது.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

திரு. லலித் அதுலத்முதலி கொலை, ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை, மற்றும் மாகாணசபை தேர்தல் காலங்களில் நாட்டில் வன்செயல் இடம்பெறுமென பலர் அஞ்சியிருந்தனர்.

எனினும் அரசாங்கம் இவைகளை வெற்றி கொண்டு தேர்தலையும் ஜனநாயக முறையில் நடத்தி முடித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வே - சி)

## 3 மாகாண சபைகளிலும் ஆட்சியமைக்க எதிரணி முடிவு

### சிறிமா - காமினி அறிவிப்பு

(கொழும்பு)

மேல் மாகாணம், தென் மாகாணம், வடமேல் மாகாணம், ஆகிய மூன்று மாகாணசபைகளில் பொது ஜன ஐக்கிய முன்னணியும் ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியும் இணைந்து செயல்படுமென்று திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் திரு. காமினி திசநாயக்காவும் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

மேற்படி மூன்று மாகாணங்களிலும் எதிர்க்கட்சிகள் இணைவதால் அவை பெரும்பான்மை ஆசனங்களை பெறுவதை யடுத்து தமக்குள் பொது உடன்பாட்டுடன் செயற்பட அவை முடிவு செய்துள்ளனவாம்.

அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த மாகாணசபைகளில் கூட்டணிகட்சிகள் ஆட்சி செலுத்தும் போது அதன் (3-ம் பக்கம் பார்க்க)

## இனவாத, தீவிரவாத அரசியல் நிராகரிப்பு

(கொழும்பு)

நடத்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் அநேகமான மக்கள் இனவாத, தீவிரவாத அரசியலை நிராகரித்துள்ளார்கள் என்று ஜனாதிபதி டி. பி விஜயதுங்க குறிப்பிட்டுள்ளார்.

நேற்று நடந்த அமைச்சர (3-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ். பி. மெடிக்கல்ஸ், 480, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி-28)

### மில் விற்பனைக்கு

இரண்டு Wilco இரைண்டர், சோமசிறி No 7 ஆகியன விற்பனைக்குண்டு. தனித் தனியாகவும் கொடுக்கப்படும். தொடர்பு: யாழ். ரெக்ஸ், பிரசாத் வீதி, (வட்டு இந்துக் கல்லூரிக்கு அருகில்) வட்டு கிழக்கு, சித்தன்கேணி. (சி-126)


## சுற்றுப்போட்டி

(தாளையடி)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று நடைபெறவிருக்கிறது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவு பதில் விளையாட்டு அதிகாரி திரு. வி. வைரமுத்துவும், கிராம சேவை அலுவலர் திரு. வி. நடராசாவும் செய்து வருகின்றனர். (193)

## மூன்று மாதங்கள் சம்பளம் இல்லை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்கள் சகலருக்கும் கடந்த மூன்று மாதங்களாக எதுவித சம்பளக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை.

மூன்று மாத வேதனங்களையும் பெற இத்திணைக்கள ஊழியர்கள் பலதடவை நேரிலும் கடிதமூலமும் மேலிடத்துடன் தொடர்பு கொண்டும் எதுவித பலனும் தமக்குக் கிடைக்கவில்லையென தெரிவித்துள்ளனர். (154)

## ஆரம்ப பாடசாலை

(தாளையடி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அம்பன் கோட்டை கிராமத்தில் குடியமர்த்தப் பட்டுள்ள வலிகாமம் மேற்குப் பகுதி மக்களின் நலன் கருதி ஐந்தாம் ஆண்டு வரையிலான ஆரம்பப் பாடசாலை ஒன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்குடியேற்றத்திட்டத்திலுள்ள மக்களின் போக்கு வரத்து வசதி கருதி பருத்தித்துறை மருதங்கேணி பிரதான வீதியிலிருந்து குடியேற்றத்திட்டம் வரை இரண்டு மைல் நீளமான களிமண் வீதியும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் அமைக்கப்பட்டுள்ளது. (63-இ)

## வருடாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி துர்க்கா சிக்கன சேமிப்பு கடன் கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக்கூட்டத்தில் நிர்வாக சபைத் தலைவராக வி. நல்லநாதனும், செயலாளராக செ. கோணேஸ்வரனும் பொருளாளராக செல்வி வசந்தியும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக் விளையாட்டுக் கழகங்களிடையே தலைவர் வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்திவரும் நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டி தற்போது பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவருகின்றது.

இன்று 20-ம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் இரு ஆட்டங்களின் விபரம் வருமாறு:

முதல் ஆட்டத்தில் சென். றேஸ் கழகத்தை எதிர்த்து வைக்கிங்ஸ் கழகம் மோதும். 2-வது ஆட்டத்தில் சென். மேரிஸ் கழகத்தை எதிர்த்து சென். நீக்கிலஸ் கழகம் மோதும். (வி)

## மெய்வல்லுனர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் நாளை 21ம், 22ம் திகதிகளில் யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கோட்டமட்ட போட்டிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட முதலாம் இடத்தைப் பெற்ற 15, 17, 19 வயது ஆண், பெண் பிரிவினர் இப் போட்டிகளில் பங்குபற்றுவர்.

இம் மாதம் 21ம் திகதி காலை 8-30 மணிக்கு தெரிவுப் போட்டிகளும், 22ம் திகதி இறுதிப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலை/வர்த்தகம்/ முகாமைத்துவம்

1ம், 2ம், 3ம், 4ம் கல்வியாண்டு - ஆண்டு இறுதிப் பரீட்சை - 1992

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த சகல வருட மாணவர்களும் 31-05-93 இற்கு முன்பாக யாழ். பல்கலைக்கழகம், பரீட்சைக்கிளையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மீள் பரீட்சார்த்திகள் தகுந்த கட்டண பற்றுச்சீட்டுடன் தமது விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல் வேண்டும். இக் குறிப்பிட்ட திகதிக்கு பின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

பதிவாளர்.

(ஏ 3141)


## இலங்கை அரசியலில் இ. தொ. காங்கிரஸ் ஒரு தனிப் பெரும் சக்தி

(கொழும்பு)

மலையகத்தில் மட்டுமல்ல இலங்கை அரசியலிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு தனிப்பெரும் சக்தி என்பதனை மலையக மக்கள் நிரூபித்துவிட்டார்கள்.

கிராமிய தொழிற்துறை அமைச்சரும் உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சருமான எஸ். தொண்டமான் அண்மையில் நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகளின் பின்னர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: மலையக மக்கள் செறிந்து வாழும் இடங்களில் எல்லாம் ஐ. தே. கட்சிக்கு 50வீதமான செல்வாக்கு கிடைத்தது. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் கோரிக்கை இணங்க மக்கள் தமது ஒன்றுபட்ட ஆதரவை தெரிவித்துள்ளனர் என்றார். (க)

## வடக்கிற்கு மீன்பிடி வலைகள் எடுத்துவர அனுமதியில்லை

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்திற்கு கொழும்பில் இருந்து மீன்பிடி வலைகள் எடுத்துவர ஸ்ரீலங்கா அரசின் கட்டுப்பாட்டுத் தலைமையகம் அனுமதி வழங்க மறுத்துள்ளது.

இதன்காரணமாக யாழ். குடாநாட்டில் பெரும்பாலான மீனவர்கள் தொழில்செய்ய முடியாது கஷ்டப்படுகின்றனர்.

சில மீனவர்கள் மீன்பிடிவலை இன்மையால் தொழிலின்றிக் கஷ்டப்படுவதாகவும், மீன்பிடி வலைகளைப் பெறுவதற்கு மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள் பல முயற்சி எடுத்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

## சமகால நிகழ்வுகளை சித்தரிக்கும் கண்காட்சி

(உடுவில்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உடுவில் கிளையினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கண்காட்சி நாளை 21ம் திகதியும் 22ம் திகதியும் உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி ரி. சிங்கராசா தலைமையில் கண்காட்சியை உடுவில் கோட்டக்கல்வி அதிபரும், இராமநாதன் கல்லூரி அதிபருமான திருமதி ஆ. சிவஞானசுந்தரம் திறந்து வைப்பார்.

கண்காட்சியில் சமகால நிகழ்வுகளை சித்தரிக்கும் வகையிலும் விவசாயம், கைத்தொழில் சிறப்புகளை விளக்கும் வகையிலும் பல நிகழ்வுகள் காட்சிக்கு வைக்கப்படுவதுடன் செயல்ரீதியாகவும் காண்பிக்கப்பட உள்ளன. (109)

## ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை

(உடுவில்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள கஷ்டப் பிரதேச பாடசாலைகள் பலவற்றில் நிலவும் ஆசிரிய பற்றாக்குறையைப்போக்க யாழ் கல்வித்திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக இங்குள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் சேவை விபரங்கள், மாணவர் தொகைக்கேற்ப அமையாது கூடிய அளவில் உள்ள ஆசிரியர்கள் விபரம் போன்றவற்றை கோட்டவாரியாக சேகரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியே உள்ள பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்ற தீவக பிரதேசங்களிலும், பருத்தித்துறை கிழக்கு பிரதேச பாடசாலைகளிலும் ஒருமுறையேனும் கடமையாற்றாமல் தமது சேவைக்காலக் கடமையை தொடர்ந்து யாழ்ப்பாண பகுதியின் ஏனைய இடங்களில் கடமையாற்றி வரும் ஐம்பது வயதுக்குட்பட்ட ஆண் ஆசிரியர்களும் 40 வயதுக்குட்பட்ட பெண் ஆசிரியர்களும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் சேவையாற்ற என பணிக்கப்படுவர் என தெரியவருகின்றது. இவ்வாறு கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் கடமையாற்ற தகுதியுடையவர்களுடைய பெயர் விபரங்கள் கோட்டவாரியாக திரட்டப்பட உள்ளன எனவும் அறியப்படுகிறது. (109)

## கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்

யா. மா. ந. சபை வரி மதிப்பு அறிவித்தல் காணி உறுதி என்பன இலுப்பையடி சந்திக்கருகாமையில் இருந்து நா. சாந்தலிங்கம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சியுடன் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ஆரியகுளசந்தியிலிருந்து வீ. பொன்னையா என்பவரால் கண்டெடுக்கப்பட்ட காசிப்பிள்ளை தங்கமலர் என்பவரது அடையாள அட்டையும், யாழ்ஸ்ரான்லிவீதியில் இருந்து சண்முகநாதன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு கண்ணப்பன் கமலநாதன் என்பவரது அடையாள அட்டையும் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அத்தாட்சியுடன் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## கண்காட்சி ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தினால் கண்காட்சி நடாத்தப்படவுள்ளது.

யூன் மாதம் 4-ம், 5-ம், 6-ம் திகதிகளில் இக்கண்காட்சி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

ஓவியம், சிற்பம், நூல்கள், சித்திரம் முதலியவற்றை உள்ளடக்கிய இக்காட்சிக்கான ஆக்கங்கள் பொதுமக்களிடமிருந்தும், கலைஞர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றன.

இக்கண்காட்சிக்கான அனைத்து ஒழுங்குகளும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் பணிப்பின் பேரில் சன சமூகநிலையங்களின் சமாசங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (161)


## அறிவித்தல்

ஈழத்து நூல் சஞ்சிகை ஓவியம் சிற்பம் புகைப்படம் சித்த மருத்துவக்

**கண்காட்சி — 1993**

அனைத்து சித்த மருத்துவர்களினதும்

**கவனத்திற்கு**

மேற்படி கண்காட்சியில் சித்த மருத்துவத் துறைக்கு மிக முக்கிய இடம் வழங்கப்படவுள்ளதால் இத்துறை பற்றிய கண்காட்சி எவ்வாறு அமைய வேண்டுமென்பது பற்றி ஆராய்வதற்கான கலந்துரையாடலொன்று எனது அலுவலகத்தில் 23-05-93-ம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறும். இத்துறை சார்ந்த அனைத்து வைத்தியர்களையும் ஆர்வலர்களையும் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றி உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சுந்தரம் டிவகலாலா,
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
இணைப்பாளர்,
கண்காட்சிக் குழுக்களின் சார்பில்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
93-05-18.
(ஏ-3139)

## அறிவித்தல்

ஈழத்து நூல் சஞ்சிகை ஓவியம் சிற்பம் புகைப்படம் சித்தமருத்துவக் கண்காட்சி

1993

**அனைத்துப் புகைப்படக் கலைஞர்களினதும் கவனத்திற்கு**

இக்கண்காட்சியில் பங்கு பற்றும் புகைப்படங்கள் சம்பந்தமாக போட்டியொன்றினை நடாத்திப் பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. காட்சியிலும் போட்டியிலும் வைக்கப்படும் புகைப்படங்கள் சம்பந்தமாக அளவிலும் நிறத்திலும் எவ்வித கட்டுப்பாடும் இல்லை. 30-05-93ம் திகதிக்கு முன்னர் எம்மோடு தொடர்பு கொள்ளும் புகைப்படக் கலைஞர்களும் நிறுவனங்களும் மட்டுமே இப் புகைப்படக்கண்காட்சியில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படுவர் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்/இணைப்பாளர் கண்காட்சிக் குழுக்களின் சார்பில்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம். 93-05-18. (எ-3138)

# ஈழ அகதிகள் வெளியேற சுவிஸ் அரசு காலக்கெடு

(பேர்ண்)

1992 செப்ரெம்பர் மாதத்திற்கு பின்னர்வந்த இலங்கை அகதிகளின் ஒரு பகுதியினரை வெளியேறுமாறு சுவிஸ் அரசு காலக்கெடு விதித்துள்ளது.

திருப்பியனுப்பப்படும் அகதிகளை கொழும்பில் வைத்து பராமரிக்கவும் சுவிஸ் அரசு நிதியுதவி வழங்குவதற்கும் ஏற்பாடு செய்துள்ளது.

1992 செப்ரெம்பர் மாதத்திற்கு பின்னர் சுவிஸ் செல்வதற்கு இலங்கை அகதிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

நோர்வே அரசும் சுவிஸைப் பின்பற்றி தமது நாட்டில் அகதி அந்தஸ்து கோர இலங்கைத் தமிழருக்கு மறுப்புத் தெரிவித்துள்ளது. (ரி)

# எதிரணியின் செல்வாக்கு அதிகாரத்தை பரவலாக்கும்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் எதிரணிச் செல்வாக்குகள் அதிகரித்திருப்பது அதிகார பரவலாக்கலை பலப்படுத்த உதவும் என்று தெரிவிக்கப் படுகிறது.

நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களைக் கருத்திற் கொண்டு மாகாணசபை முறையைப் பார்க்கின்ற போது மூன்று மத்திய மாகாணங்களில் எதிர்க்கட்சிகளின் அதிகாரங்கள் ஏற்படுவதற்கான சாதகநிலை, அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தையும் ஜனநாயகத்தையும் பலப்படுத்த உதவியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

# சந்திரிகாவுக்கு ஆகக்கூடிய தனிப்பட்ட விருப்பு வாக்குகள்

(கொழும்பு)

நடைபெற்ற மாகாணசபை தேர்தலில் ஆகக்கூடிய தனிப்பட்ட விருப்பு வாக்குகள் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற திருமதி சந்திரிகா விஜய குமாரணதுங்கா பெற்றுக் கொள்வார் என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திருமதி சந்திரிகா விஜய குமாரணதுங்கா $2\frac{1}{2}$ லட்சத்திற்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகள் பெற்றுள்ளார் என்று தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேல்மாகாண முதலமைச்சராக திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க பதவியேற்கலாம் என்று தெரியவருகிறது.

இந்தப்பதவிக்கு முன்னுள் கொழும்பு மேயர் ஏ. எஸ். எம். பௌஸியின் பெயரும் அடிபடுகிறது. (ரி)

## சிவராசன் டயறி

(சென்னை)

பத்மநாபா கொலைவழக்கில் கடந்த வியாழன் அன்று எதிரிகளுக்கு சிவராசன் டயறி நகல் வழங்கப்பட்டது

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ சர்வமதசபைப் பிரசங்கத்தின் நூற்றாண்டு விழா 2ம் கட்ட நிகழ்ச்சிகள் மாணவர் கருத்தரங்கமாக ராமகிருஷ்ணாலயத்தில் நடைபெற்றது.

செல்வி தனேஸ்வரி தம்பித்துரை தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் மாணவிகள் இ. காயத்ரி, ச. இலகவதி, க. ஸ்ரீ நாகதர்சினி, இ. சுகந்தினி, ப. சுபாஜினி, யோ. ஜெயஸ்ரீ, கா. திருமகள் ஆகியோர் பங்குபற்றினர்.

சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட இராமகிருஷ்ணாலய இயக்குனர் இ. ராஜாமகேந்திரசிங்கம் உரைநிகழ்த்தினார்.

## 3 மாகாண

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்படலாமென அவதானிகள் எதிர்பார்க்கின்றனர். (சு-சி)

## இனவாத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லைக் கூட்டத்தில் தமது கொள்கை விளக்கத்தை எடுத்துக் கூறும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாகாணசபைத் தேர்தலில் இன, மொழி பேதங்களை கருத்திற் கொள்ளாது மக்கள் எல்லா இனத்தவரும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களித்துள்ளார்கள் என்றும் ஜனாதிபதி விஜயதுங்க மேலும் கூறியுள்ளார். (சு-சி)

## பலரது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேவையில் இருந்து இடைநிறுத்தி, சிவில் சேவை சிரேஷ்ட அதிகாரி பாலித ரணசிங்காவை அவ்விடத்திற்கு நியமித்துள்ளார். பலரது பதவிகள் பறிபோயுமுள்ளன.

ஏயர் லங்கா பணிப்பாளர் சபையை இந்த வாரத்துக்குள் இராஜினாமா செய்யுமாறு கட்டளை இட்டுள்ளார் என்றும் மற்றும் பல மாற்றங்களை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சு-சி)

## வடமேல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கியமுன்னணிசார்பில் திரு. அமரசிறி தொடங்கொடவும் முதலமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளதாக திருமதி சந்திரிகா குமாரணதுங்க பி. பி. ஸி 'சந்தேஸிய' வுக்கு கூறியுள்ளார்.

இதேவேளை மேல் மாகாண சபை முதல்வராக திருமதி சந்திரிகா குமாரணதுங்க நியமிக்கப்படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (சு-சி)

## கண்காணிப்புக் குழு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களுக்கும் தேர்தலுக்கு முன்னும் தேர்தல் அன்றும் விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்திருந்தனர்.

தேர்தலின் போது பெருமளவு முறைகேடுகள் நிகழாத போதும் தேர்தலுக்கு முன் பல புகார்கள் அவதானிக்கும் குழுவிடமும் கொடுக்கப்பட்டுள்ளதாம். (கே-சி)

## சிறிமா-காமினி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

இது குறித்து திரு. காமினி திசநாயக்கா பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டதாவது:

"எங்களுக்குள் உள்ள வேற்றுமைகளை இணக்கண்டு இரு கட்சியினரும் ஒரு உடன்பாட்டுக்கு வந்து வேற்றுமைகளை களைந்துள்ளோம்.

புதிய ஜனாதிபதி சில முன்னேற்றகரமான முயற்சிகளை செய்துள்ளார். முக்கியமாக சில ஸ்தாபனங்கள் ஏகசாதிபத ஸ்தாபனமாக இருந்த போதிலும் அவைகள் இராணுவத்திற்கு சரிசமனாக செயல்பட்டுள்ளன. இதனால் பலர் இறந்தும் பாதிப்புற்றுமுள்ளனர். மக்களை கவருவதற்காக புதியஜனாதிபதி இவற்றை களைவதையிட்டு ஆதரிக்கின்றோம்.

இருந்த போதும் ஐ.தே.கவும் எமது கட்சியும் கூட்டுச் சேருமா என்பதையிட்டு தற்போது கருத்துக்கூறவிரும்பவில்லை என்றார்.

இதேவேளை இது குறித்து திருமதி சந்திரிகா குமாரணதுங்க கூறுகையில்; தேர்தல் உடன்பாடு ஒன்றுக்கு தாங்கள் தயாராகவுள்ளதாகக்கூறியுள்ளார்.

மேலும் நாட்டில், ஜனநாயகம், மனித உரிமை, நீதி இவைகளை நிலைநிறுத்தவும் அரசபயங்கரவாத செயல்களை முடிவுக்குக் கொண்டுவரவும் வெகு விரைவில் தேர்தலை நடாத்த அரசை வற்புறுத்துவோம் எனவும் அவர் மேலும் கூறினார். (கே-சி)

## பொது அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சுகாதாரம் சம்பந்தமான பொது அறிவுப் போட்டியொன்று யுனிசெவ் நிறுவனத்தினால் யாழ் மாநகரசபையின் அனுசரணையுடன் நடாத்தப்படவிருக்கிறது.

யாழ் மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களிடமிருந்து போட்டியாளர்கள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள். விண்ணப்பங்கள் யாழ் மாநகர யுனிசெப் நிறுவனத்துக்கோ அவ்வப் பகுதிக்குரிய சனசமூகநிலையங்களின் சமாசங்கள் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படலாமென்று தெரியவருகின்றது. (161)

## விவசாயிகளுக்கு மண்வெட்டி

(புலோலி)

வடமராட்சிப் பகுதி விவசாயிகளுக்கு வாளி, மண்வெட்டிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை புலோலி, அம்பன் சமூகநல சேவை நிலையங்கள் மேற்கொண்டுள்ளன

வாளி, மண்வெட்டிகள் தேவையான விவசாயிகள் உடனடியாக புலோலி அம்பன் சமூகநல சேவை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (61)

குமண கப்பல் ——

# அரச ஊழியர்களுடன் திருமலைக்கு செல்கிறது

(யாழ்ப்பாணம்)

குமண கப்பல் இம்மாதம் 22ம் திகதி அரசாங்க உத்தியோகத்தர்களையும் ஏற்றிக் கொண்டு திருகோணமலைக்கு புறப்படவுள்ளது.

இக்கப்பலில் 95 பயணிகள் பிரயாணம் செய்ய முடியும்.

மீண்டும் இக்கப்பல் 23ம் திகதி திருமலையிலிருந்து சிகிச்சை பெற்ற நோயாளர்களை யாழ்ப்பாணம் அழைத்துவரும். 24ம் திகதி திரும்ப யாழ்ப்பாணத்திலிருந்து சிகிச்சைபெறச் செல்லும் நோயாளர்களை அழைத்துச்செல்லும். (159)

# மட்டு. வாழைச்சேனை வீதிக்கு இராணுவப் பாதுகாப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதியில் வாரத்தில் ஏழு நாட்களும் படையினர் வீதிப்பாதுகாப்பில் ஈடுபடுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் வீதிப்பாதுகாப்பு நடவடிக்கையை அடுத்து இப்பிரதான வீதியில் அரச வாகனங்கள் தினமும் பிரயாணம் செய்யும் நிலையேற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (ரி)

நெசவு பயிற்சி ——

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(மானிப்பாய்)

யாழ். நல்லூரிலுள்ள நெசவுப் பயிற்சிப் பாடசாலைக்கு 1993, 94 பயிற்சி ஆண்டுக்கான மாணவ மாணவியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு புடவைக் கைத்தொழில் உதவிப் பணிப்பாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவராகவும் க. பொ. த. சாதாரணதர பரீட்சையில் கணிதம், தமிழ் ஆகிய இரு பாடங்கள் உட்பட சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 25-ந் திகதிக்கு முன்னர் அதிபர், நல்லூர், நெசவுப் பயிற்சிப் பாடசாலை, இல 194, அரசடிச்சந்தி, நல்லூர் என்னும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர். (71)

## தேர்தலில் தோல்வி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும், நவசமசமாஜக் கட்சியும் மாகாணசபைத் தேர்தலில் தோல்வியடைந்துள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பதினொரு மாவட்டங்களிலும், நவசமசமாஜக் கட்சி 17 மாவட்டங்களிலும் போட்டியிட்டன. (ரி)

## பாராட்டு விழா

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலய மஹோற்சவ காலத்தில் பெரிய புராண விரிவுரைகளை நடத்திய ஆறு திருமுருகனுக்கு அவ்வாலய பரிபாலன சபையினரால் அண்மையில் பாராட்டுவிழாவும் பொன்னாடையும் போர்த்திக்கௌரவிக்கப்பட்டது. (71)

## மாதாந்த உதவிப்பணம்

(மானிப்பாய்)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெற்று வருபவர்களுக்கான ஜனவரி மாதத்திற்குரிய பணம் அந்தந்தப்பகுதி கிராம சேவை அலுவலர்கள் மூலம் தற்போது வழங்கப்படுகின்றது. (71)

## தமிழ்தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் தமிழ்தின விழா நாளை வெள்ளிக்கிழமை செல்வன் அ. பராஜிதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவிற்கு பேராசிரியர் திரு. சண்முகதாஸ் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்கள். தமிழ்தின போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழும் இன்று வழங்கப்படும். (158)

## இராசி பலன்

20-05-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு வைகாசி 07)

சதுர்த்தசி மு. இ. 7-24 வரை பரணி பி. இ. 10-2 வரை இராகுகாலம் பகல்1-22 முதல் 2-52 வரை சுபநேரம் காலை 7-22முதல் 8-52 வரை சித்தயோகம் மோதாபன அமாவாசை விரதநாள்.

மேடம்: மனஸ்தாப நிவர்த்தி, தொழில் வெற்றி, இனிய உரையாடல்.

இடபம்: இனப்பகை, விவகாரங்களில், அபசயம், அலைச்சல்.

மிதுனம்: செய்தொழில் லாபம், நாணயம் தவறுமை, தெய்வசிந்தனை.

கடகம்: தயாளசிந்தை, இல்லச்சிறப்பு. சகோதர உதவி.

சிங்கம், மனசங்கடம், எதிரிகள் பகை, தொழில் சங்கடம்.

கன்னி: துஷ்டர் தொல்லை, மறைந்து திரிதல், குடும்ப வேற்றுமை.

துலாம்: வெளியுலக தொடர்பு. நீண்டநாள் கடன்வரும், பாராட்டு.

விருச்சிகம்: மாதர் நட்பு, தொழில் லாபம், அதிகார சிறப்பு.

தனுசு: ஆயாசம், கெட்ட சகுணம், அமைதிக்குறைவு

மகரம்: பிறர்நேயம், வேண்டாத பகை, அதிக யோசனை.

கும்பம்: பணியால் பாராட்டு, சுபகாரிய நிறைவு, சந்தோஷம்.

மீனம்: வியாதி தொல்லை, கீழ்படிதல், முகஸ்துதி.

— ஜோதிடர்

# ★ ராஜீவ் கொலை வழக்கு: அரசு தரப்பு சாட்சி 'சாள்ஸ்' சிறையிலிருந்து தப்பி ஓட்டம்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் அரசு தரப்பு சாட்சியான சாள்ஸ் நவாப் நேற்று முன்தினம் இரவு துணிகரமாக தப்பி ஓடிவிட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சைதாப்பேட்டையில் உள்ள தனிமுகாம் சிறை ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்த போதே இவர் தப்பி ஓடிவிட்டாராம்.

இலங்கைத் தமிழரான சாள்ஸ் நவாப் விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர் எனவும் அவர் சிறைச்சாலை சுவரை தாண்டிக்குதித்து அல்லது சிறையின் ஓடுகளைப் பிரித்து அதன் வழியாக தப்பியிருக்கலாமெனவும் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இவர் எப்படித் தப்பினார் என்பது குறித்து தீவிர விசாரணை நடைபெற்றுவருகிறதாம். (தி)

## ஆசிரியர் சம்பளம்

(திருநெல்வேலி)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான சம்பளம் கோப்பாய், நல்லூர் அலுவலகங்கள் ஊடாக நேற்று கொடுப்பனவுகளுக்கு வழங்கப்பட்டன.

பாடசாலைகள் இன்று ஆசிரியர்களுக்கான சம்பளத்தை வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (157-சி)

## புலிகளுக்கு தொடர்பாம் வழக்கறிஞர் வாதாட்டம்

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்கில் முக்கிய குற்றவாளிகள் விடுதலைப்புலிகள் தலைமைக்கு எழுதிய 5 கடிதங்கள் இக்கொலையில் புலிகளுக்குத் தொடர்பு உண்டு என்பதை நிரூபிப்பதாக இவ்வழக்கு விசாரணையின் போது அரசு தரப்பு வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

நேற்று பூந்தமல்லியில் சிறப்புப் பாதுகாப்பு வசதியுடன் கூடிய நீதிமன்றத்தில் அரசு தரப்பில் வாதாடிய ஜேக்கப் டானியல் இவ்வாறு தெரிவித்ததுடன் பல குற்றச் சாட்டுக்களையும் சுமத்தினார்.

முருகன் நளினி உள்ளிட்ட அனைத்து குற்றவாளிகளும் நேற்று விசாரணையில் ஆஜராகினர்.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி எஸ். எம். சித்திக் எதிர்வரும் 26ம் திகதிக்கு ஒத்திவைத்தார் (கே)

## மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வலிகாமம், தீவகம், உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும்.

பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காலை 11 மணி முதல் நண்பகல் 12-30 மணி வரை வட இந்து மகளிர் கல்லூரியிலும், சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாலை 3 மணி முதல் 4 மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறும். (சு-சி)

## கேளிக்கைகளை நிறுத்த ஜனாதிபதி முடிவு

(கொழும்பு)

நாட்டில் கேளிக்கை நிகழ்ச்சிகள் அனைத்தையும் நிறுத்தி விடுவதற்கு அரசு உறுதியான முடிவினை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி விஜயதுங்க கூறியுள்ளார்.

அமைச்சரவையின் முதலாவது கூட்டத்தில் ஆற்றிய உரையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்;

தற்போது மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்களை அரசு தொடர்ந்தும் மேற்கொள்ளும். ஏதாவதொரு திட்டம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவேண்டிய அவசியம் இருப்பின் அதிக செலவில்லாமல் அது எளிமையாக நடைபெறும் எனவும் கூறினார். (சி)

## நோயாளர் அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆஸ்மா (தொய்வு) நோயால் பாதிக்கப்படும் நோயாளர் தொகை அதிகரித்த வண்ணமுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 1992 ம் ஆண்டு மொத்தம் 5780 பேர்கள் ஆஸ்மா நோய்க்கு ஆஸ்பத்திரி சிகிச்சை பெற்றுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (154)

## அமைச்சர்களுக்கு முழு அதிகாரம்

கொழும்பு

தற்போது உள்ள அமைச்சர்களுக்கு அந்தந்த துறைகளில் முழு அதிகாரமும் வழங்க ஜனாதிபதி விஜயதுங்க முடிவு செய்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை நேற்று நடைபெற்ற அமைச்சரவையின் முதலாவது கூட்டத்தில் ஜனாதிபதி விஜயதுங்க கொள்கை விளக்க உரையாற்றுகையில்;

சகல அமைச்சர்களும் தாம் மேற்கொள்ளும் பல்வேறு பணிகளுக்கும் அவையே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். அரச சேவையிலுள்ள அனைவரும் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ள ஒழுக்கக் கோவையை அனுசரிக்க வேண்டும். பொறுப்புள்ள பதவி வகிக்கும் அனைவருக்கும் இந்த ஒழுக்கக் கோவை ஏற்புடையதாகும் என்றார். (சி)

## தேங்காய் விலை வீழ்ச்சி

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது தேங்காயின் விலையில் அதிக வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதம் 30, 35 ரூபா வரையில் விற்கப்பட்ட தேங்காய் தற்போது 15, 18 ரூபாவாக திருநெல்வேலி, சுன்னாகம், சாவகச்சேரி சந்தைகளில் மிகக் குறைந்த விலையில் விற்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (154)

## மரண அறிவித்தல்

### அப்பையா இராசநாயகம்

இணுவில் தெற்கு பிரபல வர்த்தகர் அப்பையா இராசநாயகம் 14-05-93 வெள்ளிக்கிழமையன்று காலமானார். அன்னாரது ஈமக்கிரியைகள் (20-05-93) இன்று வியாழக்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் காலை 10-00 மணியளவில் தாவடி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: இ. மயூரநாதன் (மகன்),
இ. சற்குருநாதன் இ. சிவகுருநாதன் (மகன்),
(ஐங்கரன் அச்சி ஆலை, அ. பற்குணம் (மருமகன்),
இணுவில் தெற்கு.) அ. செல்வநாயகம் (சகோதரன்)
(இ 124)

## ஜனாதிபதியின் போக்கில் மாற்றம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் நடைமுறைக்கும் புதிய ஜனாதிபதியின் போக்கிற்கும் பல மாற்றங்கள் காணப்படுவதாக பி. பி. ஸி. குறிப்பிட்டுள்ளது.

திரு. பிரேமதாசா ரூபவாஹினி, பத்திரிகைகள் ஆகியவற்றில் தம் படம், செய்திகள் வருவதை விரும்பி அதற்காகவே மிகுந்த பொருட் செலவில் கிராம மறுமலர்ச்சி இயக்கம் என்று பெயரிட்டு பிறந்தநாள் விழாக்களை கொண்டாடியது போன்று, புதிய ஜனாதிபதி எதையும் கொண்டாடப் போவதில்லையென அறிவித்துள்ளார்.

பணத்தை விரயமாக்குவது சமுதாயத்திற்கு இழைக்கும் குற்றமாகும் எனவும் அவர் தெரிவித்திருப்பது முன்னாள் ஜனாதிபதியின் போக்கை விமர்சிக்கும் கூற்றாகவே ஒலிப்பதாகவும் பி. பி. ஸி. தெரிவித்துள்ளது. (கே-இ)

## பிரேமா தொகுதியில் ஐ. தே. க. பின்னடைவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொழும்பு மத்திய தொகுதியிலும் ஐ. தே. க. வுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளதாம்.

இத்தொகுதியில் எதிர்பார்க்கப்பட்டதை விட பெருமளவு வாக்குகள் குறைவாகவே ஐ. தே. க. வுக்கு கிடைத்துள்ளதாம்.

இதேவேளை பிரதமர் ரணில் உட்பட பல அமைச்சர்களின் தொகுதிகளில் ஐ. தே க. தோல்வியடைந்ததும் தெரிந்ததே. (சு இ)

## சொந்தத் தொகுதியில் காமினி தோல்வி

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் திரு. காமினி திஸநாயக்கா தமது சொந்தத் தொகுதியான நுவரெலியா - மஸ்கெலியா தொகுதியில் பெரும் தோல்வியடைந்துள்ளார்.

இத்தொகுதியில் ஐ தே.க. முதலிடத்தையும் 2ம் இடத்தை பொதுசன ஐக்கிய முன்னணியும், 3ம் இடத்தை சுயேட்சை குழு ஒன்றும் பெற்றுள்ளன. திரு. காமினியின் கட்சி இங்கு குறைந்த வாக்குகளைப்பெற்று 4ம் இடத்தையே பெற்றுள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு நல்லதொரு தலைமைத்துவம் இன்மையே இதற்கு காரணமென பி. பி. ஸி தெரிவித்தது. (இ)

## கூட்டணிக்கு ஆதரவு காமினி கூறுகிறார்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, பொதுசன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளித்து தென், வடமேல், மேல் மாகாணங்களில் அரசை அமைக்கப்போவதாக காமினி திசநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஆனால் மாகாணசபைகளின் விதிகளின்படி அந்தந்த மாகாணத்தில் கூடுதலான ஆசனங்களைப் பெற்ற கட்சியையே ஆட்சி அமைக்குமாறு அழைப்பது விதிமுறையாகும்.

இருந்தபோதிலும் ஐக்கிய தேசியக் கட்சியிலும் பார்க்க பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் சேர்ந்தால் கூடுதலான ஆசனங்கள் இருப்பதால் எங்களை ஆட்சி அமைப்பதற்கு அதிகாரங்களை தரும்படி ஆளுநர்களை கேட்கப் போகிறோம்" என்றார். (சு.சி)

## முன்னாள் எம்.பிக்கு எதிராக பெருவாரியான புகார்கள்

(கொழும்பு)

கேகாலை மாவட்டத்தில் மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த முன்னாள் எம். பி. ஒருவருக்கு எதிராக பெருவாரியான புகார்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்த முன்னாள் எம். பிக்கு எதிராக 24க்கும் மேற்பட்ட புகார்கள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வி)

## ஆள் மாறாட்டம் செய்த பதினெட்டு பேர் கைது

(கொழும்பு)

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் ஆள்மாறாட்டம் செய்த 18 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பேருவளை, களுத்துறை, அளுத்கம ஆகிய இடங்களில் 10 பேரும், காலி, அம்பலாங்கொட பகுதிகளில் 8பேரும், தேர்தலில் ஆள் மாறாட்டம் செய்த குற்றச்சாட்டின் பேரில் கைதாகியுள்ளனர்.

இதேவேளை இத்தேர்தல் எந்தவிதமான அசம்பாவிதங்களுமில்லாமல் அமைதியாக நடைபெற்றதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர். (வி)

## ஆயிரத்திற்கும் மேற்பட்ட வடபகுதி தபால் பொதிகள் கொழும்பில் தேக்கம்

(கொழும்பு)

ஆயிரத்திற்கும் மேற்பட்ட வடபகுதி தபால் பொதிகள் கொழும்பு மத்திய தபாலகத்தில் தேங்கிக்கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதிக்கு கப்பலில் அனுப்பப்படவேண்டிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட தபால் பொதிகள் கடந்த பல மாதங்களாக கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் தேங்கிக்கிடக்கிறது. (வி)

## மதுபான கடைகளை மூடுவதற்கு தடை

(சென்னை)

தமிழ்நாட்டில் மதுபானக் கடைகளை உடன் மூடுவதை தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மதுபானக்கடைகளை இம்மாத முடிவுக்குள் மூடிவிடும்படி தமிழ்நாடு அரசு விடுத்த உத்தரவை எதிர்த்து மதுபானக் கடை உரிமையாளர்கள் தாக்கல் செய்த வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம் மேற்படி இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது. (வி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Srilanka under licence Number D/10980/B